# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

இலக்கம் 20, வோட் பிளேஸ்
கொழும்பு 07.

2014.09.16

**தாபனச் சுற்றறிக்கை இலக்கம் : 12/2014**

பல்கலைக்கழக உபவேந்தர்கள்

வளாக அதிபதிகள்

நிறுவகப் பணிப்பாளர்கள்

**பல்கலைக்கழக முறைமையில் நிர்வாகப் பிரிவைச் சேராத கல்வி சாரா ஆளணி ஊழியர்களுக்கு பாதுகாப்புக் காலணிகளைப் பெற்றுக்கொடுத்தல்.**

பல்கலைக்கழக ஊழியர்களுக்கு பாதுகாப்புக் காலணிகளைப் பெற்றுக்கொடுத்தல் சம்பந்தமாக 2010.09.20 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ள 929 ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றறிக்கையின் 4 ஆவது சரத்தின் மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

2014.09.01 ஆம் திகதி முதல் பாதுகாப்புக் காலணிகளைப் பெறுவதற்கு உரித்துடைய சகல பதவிகளுக்கும் 18 மாதங்களுக்கொரு முறை (1 ½ வருடங்களுக்கொரு முறை) தாம் பயன்படுத்திய காலணிகளை மீள ஒப்படைத்ததன் பின்னர் புதிய காலணி சோடியைப் பெற்றுக்கொடுப்பதற்கு 2014.08.21 ஆம் திகதி கூடிய 900 ஆவது ஆணைக்குழுக் கூட்டத்தின்போது தீர்மானிக்கப்பட்டது.

மேற்குறிப்பிடப்பட்ட மாற்றத்தைத் தவிர 929 ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றறிக்கையின் ஏனைய ஏற்பாடுகளில் எந்தவித மாற்றங்களும் மேற்கொள்ளப்படவில்லை.

ஏற்கனவே பாதுகாப்புக் காலணி சோடியைப் பெற்றுக்கொண்ட ஊழியர்கள் இருப்பின், 2014.09.01 ஆம் திகதியன்று காலணிகளைப் பெற்று 18 மாதங்கள் பூர்த்தியாகியிருப்பின் அவர்களும் புதிய காலணி சோடியைப் பெற்றுக்கொள்வதற்கு தகுதி பெற்றவர்களாகின்றனர்.

இதன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பணிவாய் வேண்டுகின்றேன்.

**ஒப்பம்: பேராசிரியர் ஷனிக்கா ஹிரிம்புரேகம**
தலைவர்

பிரதிகள்:-

1. செயலாளர், உயர் கல்வி அமைச்சு
2. தலைவர் அலுவலகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
3. உப தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
4. உறுப்பினர்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
5. செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
6. பீடாதிபதிகள்
7. பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள்
8. கணக்காளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
9. பல்கலைக்கழகங்களின் நிதிப் பொறுப்பாளர்கள் (Bursars)
10. நூலகர்கள், சிரேஷ்ட உதவி நூலகர்கள், உதவி நூலகர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள்.
11. பிரதிப் பதிவாளர்கள் / சிரேஷ்ட உதவிப் பதிவாளர்கள் / உதவிப் பதிவாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் / வளாகங்கள்
12. பிரதி நிதிப் பொறுப்பாளரகள் / சிரேஷ்ட உதவி நிதிப் பொறுப்பாளர்கள் / உதவி நிதிப் பொறுப்பாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் / வளாகங்கள்
13. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
14. பல்கலைக்கழகங்களின் அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகர்கள்
15. உயர் கல்வி நிறுவகங்களின் சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள் / உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள்.
16. சகல தொழிற்சங்களினதும் செயலாளர்கள்.
17. கணக்காய்வாளர் நாயகம்.

கோப்பு இலக்கம் : UGC/HR/6/1/2